RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s614

OPEN ACCESS

# பன்னிரு திருமுறைகளில் பெண்கள்

**செ. பிரேமாவதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் - 636 011, தமிழ்நாடு, இந்தியா.

# Female's in Panniru Thirumuraigal

**S. Premavathy** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem – 636 011, Tamil Nadu, India

* Corresponding Author: premavathys1985@gmail.com

Received: 19-10-2021
Revised: 19-04-2022
Accepted: 26-04-2022
Published: 16-07-2022

Check for updates

## ABSTRACT

Out of 63 Nayanmars 3 Females are Placed. Among them Karaikal Ammaiyar, Mangaiyarkarasiyar, Isaignaniyar. The main reason for the development of devotional literature is karaikal Ammaiyar. She is precocions. To give equal rights to women to be the leader (Thalaivi) mother (Natraai) Friend (Thozhi) nurse (Sevili) doing the sangam period. Goddess karaikal Ammaiyar, who lived, in the fourth and fifth centuries AD, worshiped Lord Shiva in a devotional manner. One of the sitrilakkiyam is sung by the wonderful Thiruvanthadi. Mangaiyarkarasi's devotional practice changed her husband from koon pandian to Ninraseer Nedumaran. It is stated in the study that women were not given equal rights in the Bakti literary period, although it was established that men are equal to women in devotion.

**Keywords:** Karaikal Ammaiyar, Mangaiyarkarasi, Devotional, bakti Literary, Isaignaniyar, Equal to women in devotion.

## முன்னுரை

சங்ககாலப் பெண்கள் உயர்ந்தவர்களாகவும் உரிமையுடையவர்களாகவும் இருந்தனர். இருண்ட காலத்தில் சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கம் வளர்ச்சியடைந்ததால், அச்சமயங்களின் தாக்கம் நீதி நூல்களில் காணப்படுகின்றன. இவற்றில் ஆடவர்களின் ஒழுக்கநெறியைக் கூறினாலும், பெண்களின் மீது பற்று இருக்கக் கூடாது என்றும் துறவுதான் சிறந்த வழி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்காலத்தில் வாழ்ந்த பெண்களின் இழிவுநிலையைக் காணமுடிகிறது. சைவ, வைணவ சமயங்களில் பக்தி இலக்கியங்களாக உருவெடுத்துப் பெண்களுக்கென சம உரிமை அளிக்கப்பட்டன. இறைவனை (சிவனை) வழிபடுதல் என்பது அனைவருக்கும் சமஉரிமையாக இருந்தன. இக்காலகட்டத்தில் பெண்களுக்கும் பக்தியில் சமஉரிமை அளிக்கப்பட்டது. பக்தி இலக்கிய காலத்தில் பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்பட்டது. "மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்ற கவிமணியின் சொல்லுக்கேற்ற பெண் பிறப்பு பெருமையுடையது என்ற கருத்தைப் போற்றும் வகையில் பக்தி இலக்கியங்கள் இருக்கின்றன. அடியார்களின் வரலாற்றிலும் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். குங்குலியக்கலய நாயனாரின் மனைவி தன் குடும்ப சூழ்நிலைக்காகத் தன்தாலியை விற்றுக் கொடுத்த பணத்தை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தவர் என்பதை

"காதலி தாலி கொடுத்து
ஆய்ந்தநற் குங்குலியங் கொண்டு"

இவ்வரிகளில் கூறப்பட்டுள்ளதிலிருந்து பெண்களைப் பெருமையாகப் போற்றப்பட்டுள்ளதை அறியமுடிகிறது எனவே இந்நிலை விரிவாக விளக்கும் நோக்கில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது (Natarajan, 2014).

பக்தி இலக்கியத்தை முதன்முதலில் உருவாக்கியவர் பெண் என்று கூறலாம். ஆண்கள் பல கோயில்களைக் கட்டி வழிபடினும் அடியார்களில் பெண்ணான காரைக்கால் அம்மையார் மூத்த திருப்பதிகமும் அற்புத திருவந்தாதியும் இயற்றி பெண்களைப் பெருமைபட செய்வதராவர். காரைக்கால் அம்மையார் பக்தி சிறப்பும் விடாமுயற்சியும் கொண்டவர். இல்லற வாழ்வை இழந்தாலும் இறைவனை வென்றவர் என்று கூறலாம். இதனால் இறைவன் புனிதவதியை நாடிவந்து "அம்மையே" என்று அழைக்கும் பெருமைக்குரியவர் என்பதை பக்தி இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

## சமய உரிமை

அடியார் சிவனைப் போற்றி பாடும்போது உமையொரு பாகன் என்று கூறுமிடத்துச் சிவன் தன்னுடைய உடம்பில் சரிபாதியாகப் பெண்ணுக்குக் கொடுத்துப் பெருமை செய்தவர் என்று உறுதிபட குறிப்பிடப்பட்டுள்ளனர். சோழக்குலத்தில் பிறந்து பாண்டியனின் கரம் பிடித்தவர் மங்கையர்க்கரசியார். நின்றசீர் நெடுமாறன் சமண சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்தாலும், தன்னுடைய மனைவி கடவுளையே தொழ வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. மங்கைர்க்கரசி சிவனை வழிபட்ட போதும், பாண்டிய மன்னன் சைவச் சமயத்தைப் பின்பற்றி வழிபட கூடாது என்று தடைவிதிக்கவுமில்லை.

"மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை

வரிவளைக் கைம்மட மானி

பங்கயச் செல்வி பாண்டிமா தேவி

பணிசெய்து நாள்தொறும் பரவ"

என்ற வரிகளில் திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியைப் போற்றி பாடியுள்ளார் (Natarajan, 2014). இதிலிருந்து பெண்கள் தங்களுக்குப் பிடித்த சமய கடவுளை வழிபடுவதற்கு சமஉரிமை அளிக்கப்பட்டதை அறியமுடிகிறது. மேலும் மகளிர் தன் மைஞ்சரோடு சேர்ந்து தொழுது போற்றிப் பணிபுரியும் வயல்கள் சூழ்ந்த திருவைகாவூர்.,

"மைஞ்சரோடு மாதர்பல ருந்தொழுது

சேரும்வயல் வைகாவிலே"

இவ்வரிகளில் திருஞானசம்பந்தர் ஆடவருடன் மகளிரும் சிவனை வழிபட்டனர் என்ற கருத்தினைப் பதிவாக்கியுள்ளார் (Natarajan, 2014).

## இசைக்கலை

பல்லவ, பாண்டியர் காலத்தில் பெண்கள் இசையில் வல்லவர்களாக இருந்தனர். பண் கலந்திருக்கும் தமிழிசை வல்லவர்களாக மகளிர் எண்ணற்கரிய நல்ல குணத்தினராய், வேலினை வென்ற கூர்மை மிகுந்த விழிகளையுடையவராய், ஈசன் அருள் வண்ணமும் ஆற்றல் வண்ணமும் பாடி, மறை இசைபாட அதனை இசை ஆர்வலனாய் செவி கொடுத்து கேட்டு மகிழ்ந்தனர் என்பதை,

"பண்ணில் நல்லமொழி யார் பருவ ளத்துவர் வாயினர்

எண்ணில் நல்லகுணத் தாரினை வேல்வென்ற கண்ணினார்

வண்ணம் பாடிவலி பாடித்தம் வாய்மொழி பாடவே

அண்ணல் கேட்டுகந் தானும்ஐ யாறுடை ஐயனே"

என்ற பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது (Natarajan, 2014).

பெண்கள் ஆடவர்களுடன் மட்டுமல்லாது தங்களது மைந்தர்களோடும் சேர்ந்து இறைவனை பாடிப் போற்றியுள்ளனர் என்ற கருத்தை,

“கோல விழாவின் அரங்கது ஏறிக்

கொடி இடை மாதர்கள் மைந்தரோடும்

பாலென வேமொழிந்து ஏத்தும் ஆவுர்ப்”

இப்பாடலில் பதிவாக்கியுள்ளார் (Natarajan, 2014).

மதங்கசூளாமணி போன்ற பெண்கள் தன் கணவன்மார்களுடன் சேர்ந்த இசைப்பாடல்களை உலகம் புகழப் பாடினர்.

“போர் ஆர் வேற்கண் மாதர் மைந்தன்

புக்கிசை பாடலினால்

பார் ஆர்கின்ற பட்டினத்துப் பல்லவ னீச்சரமே”

என்ற வரிகளினால் உணரமுடிகிறது (Natarajan, 2014). இவற்றிலிருந்து பெண்கள் இறைவனை வழிபடும் போது தன் கணவன் மற்றும் பிள்ளைகளுடன் இசைபாடி வழிபட்டனர் என்பது தெரிகிறது. பெண்கள் இசைக்கலையில் சிறந்து விளங்கினர். சிவனுக்கு இணையாக உமையம்மை அறுபத்து நான்கு கலைகளை அரங்கேற்றி காட்டினார் என்பதும் சிவன் தனக்கு இணையாக உமையொரு பாகனாகத் திகழ்ந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆடல் கலை

மகளிர் இசைக்கலையில் மட்டுமல்லாமல் ஆடல் கலையிலும் சிறந்து விளங்கினர். இதனை

“பூவியலும் பொழில் வாசம் வீசப்

புரிகுழ லார்சுவடு ஒற்றிமுற்றப்”

என்ற வரிகளில் பெண்கள் தம் கால்களால் தாளத்தை எழுப்பினர் என்ற கருத்தினை ஞானசம்பந்தர் பதிவாக்கியுள்ளார் (Natarajan, 2014). பெண்கள் ஆடல், பாடல்களில் தங்கள் ஊரிலுள்ள மக்களை மகிழ்வித்தலும் மக்களிடம் பொன்னும் மணியும் பரிசாகப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

“சுற்றிய வாசலின் மாதர் விழாச்

சொற்கவி பாடநி தானநல்கப்”

என்ற வரிகளில் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது (Natarajan, 2014).

## தாய்மை

பெண்களைப் பாதுகாக்க வேண்டியது அரசனின் கடமையாகும். சிவனை வழிபடும் தாய்மையுடைய பெண்கள் காக்கும் உரிமையை மன்னன் செய்யாமல் தவறிவிட்டால் அவன் மீளாத நரகத்திற்குச் செல்வான் என்று திருமூலர் கூறுகிறார்.

“ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்

தேவர்கள் போற்றுந் திருவேழ் தாரையுங்

காவலன் காப்பவன் காவா தொழிலனேல்

மேவும் மறுமைக்கும் மீளா நரகமே”

என்று இடித்துரைத்துள்ளார் (Ramanathan Pillai, 2009). இதிலிருந்து திருமூலர் வாழ்ந்த காலத்தில் பெண்களைப் பாதுகாக்க வேண்டியது அரசனின் கடமையாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் ஆண்கள் எல்லாம் படை வீரர்களாகத் தன் நாட்டுக்காகப் பகைநாட்டின் மீது போர் தொடுத்து சென்ற காலத்தில் அப்பெண்களுக்குப் பாதுகாப்பாக அரசன் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கற்புநிலை

பெண்களின் கற்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட சமுதாயமாகப் பக்தி இலக்கிய காலம் இருந்துள்ளது. ஆனால் ஆடவர்களின் கற்புநிலையைப் பற்றி கூறவில்லை. பத்தினிப் பெண்களைச் சித்தம் கலங்குமாறு தீமைகள் எசெய்யும் கொடியவர்கள் பொருளும் உயிரும் நீங்கி கொடிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவர் என்பதை,

"பத்தினி பக்தர்கள் தத்துவஞானிகள்

சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்

அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிருள்

சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே"

என்ற பாடல் வரிகளின் மூலம் கூறப்பட்டுள்ளன (Ramanathan Pillai, 2009). இதிலிருந்து பெண்கள் ஆடவர்களால், துன்பத்தை அடைந்தனர் என்பதையும் பெண்களுக்குத் துன்பம் செய்யும் ஆடவர்கள் நரகத்தை அடைவர் என்பதையும் மக்களிடையே அச்சுறுத்தப்பட்டதை இதன்மூலம் அறியமுடிகிறது.

## இழிவுநிலை

பெண்களைச் சங்க இலக்கியத்தில் உயர்வாகக் கூறியிருந்தாலும் பரத்தையர் என்று இழிவாகவும் குறிப்பிட்டுள்ளனர். மருதநிலத்தில் பெண்களில் பரத்தையர் என்ற பிரிவும் இருந்திருக்கிறது. பக்தி இலக்கியத்தில் பெண்கள் உயர்வாகவும், சமமாகவும் மதிக்கப்பட்டிருப்பினும் சில இடங்களில் மிகவும் இழிவுநிலையில் சுட்டப்பட்டுள்ளனர். அடியார்கள் பெண்களுக்குச் சமஉரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையில் இருந்தாலும் சில அடியவர்கள் பெண்களை இழிவு நிலையில் தாழ்த்தப்பட்டவராகக் கூறியுள்ளனர். சங்ககாலத்தில் ஆண்வழிச் சமூகம் மேலோங்கியதால் பெண்களை இரண்டாம் நிலையாகப் பார்க்கும் சமூகமாக இன்றும் உள்ளது.

## விலைமகள்

தந்தை இன்னார் என்று அடையாளப்படுத்த முடியாதலால் தமக்கும் வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்படாதவர்களாக பரத்தையர் இருந்தனர். விலை மகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளை இச்சமூகத்தில் இழிவுபடுத்தினர். இதற்குச் சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் புராணங்களும் சான்றாக அமைகின்றது. திருமூலர் தன் திருமந்திரத்தில்,

"கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாகுமே"

என்று குறிப்பிட்டுள்ளார் (Ramanathan Pillai, 2009). அவர் வாழ்ந்த காலத்தில் விலைமகள் என்ற பிரிவு இருந்துள்ளது. இச்செயல் பெண்களை இழிவான சொல்லாக இன்றளவும் தமிழ்ச்சமுதாயத்தில் பேசப்படுகின்றன.

## கணவனின் இயலாமை

கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாழ்வதே வாழ்க்கை. எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாதவர் இயற்பகை நாயனார். சிவன் மாற்றுருவில் சிவனடியாராக வந்து இயற்பகை நாயனாரிடம் உன் மனைவியை கொடு எனக் கேட்க, அம்முதியவருக்குக் கொடுத்துவிட்டார் என்பதை

"செய்தவர் வேண்டியது யாதும் கொழுடுப்பச் சிவன்தவனாய்க்

கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றாலும்

மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்ந்த பெரும்புகழ் வந்து

எய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே"

என்ற வரிகளில் கூறப்பட்டுள்ளது (Natarajan, 2014). இயற்பகை நாயனார் மனைவியை ஒரு பொருளாகக் கருதி தானம் கொடுத்துள்ளார். பெண் தான் விரும்பாவிடினும், கணவனின் ஆணையை நிறைவேற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலை காரணமாக அமைகிறது. அப்பெண்ணுக்கு மறுத்துக் கூறும் உரிமை வழங்கப்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

## பெண்களைத் தண்டித்தல்

சுந்தரால் பல்லவர்குல அரசனாகப் புகழப்பட்டவன் கழற்சிங்க நாயனார். திருவாரூரில் உள்ள கோயிலில் கீழே வீழ்ந்து கிடந்த மலரினை அவ்வரசனின் மனைவி முகர்ந்துப் பார்க்கும் போது, செருத்துணை நாயனார் அப்பெண்ணின் மூக்கை அரிந்துவிட்டார். இதை அறிந்த அரசன் அந்நாயனாரிடம் தாங்கள் செய்தது சரியே என்று கூறி, தன் மனைவி என்றும் பாராமல் வாளை எடுத்துக் கரத்தை வெட்டினான் என்பதை

"மாதவத் தோர்தங்கள் வைப்பினுக்கு

ஆரூர் மணிக்கு வைத்த

போதினைத் தான் மோந்த தேவிதன்

மூக்கை அரியப் பொற்கை

காதிவைத் தன்றோ அரிவதென்று

ஆங்கவள் கைதடிந்தான்

நாதமொய்த் தார்வண்டு கிண்டுபைங்

கோதைக் கழற்சிங்கனே"

என்ற வரிகளில் பதிவாக்கப்பட்டுள்ளது (Natarajan, 2014). மன்னனின் மனைவி என்று பாராமல் எவரோ ஒருவர் தண்டிப்பதும், அதையும் அரசனே பாராட்டப்படுவதும் பெண்களை மதிக்காமல் இழிவுநிலையில் வைத்து தண்டித்துள்ளார்.

## கலிக்கம்ப நாயனார்

"கலிகம்ப நாயனாரைச் சுந்தரர்

கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்"

என்ற வரிகளில் நீண்ட வில்லை உடையவரும் அடியார்க்குப் பூசை செய்ய மறுத்த மனைவியின் கையைத் துண்டித்தவருமான கலிக்கம்பர் நாயனார் என்று குறிப்பிட்டுள்ளார் (Natarajan, 2014). இவரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டுள்ளார்.

"சைவத் திருவுரு வாய்வரத் தான் அவன் தாள்கழுவ

வையத் தவர் முன்பு வெள்கிநீர் வாரா விடமனைவி

கையைத் தடிந்தவன் பெண்ணா

கடத்துக் கலிக்கம்பனே"

என்ற பாடலடிகளின் மூலம் ஈசன் மாறுகோலம் பூண்டு வர, கலிக்கம்பர் அவர் திருவடிகளில் தூயநீர் கொண்டு கழுவ வேண்டும் என்று தன் மனைவியிடம் கூற அவள் வெட்கம் ஏற்பட மறுத்ததால், அவளின் கையை வெட்டினான் (Natarajan, 2014). நாணம் என்பது பெண்ணின் இயற்கையான குணங்களில் ஒன்றாகும். பெண்கள் தங்களின் கணவனைத் தவிர மற்ற ஆண்களுக்கு முன் வர நாணம் கொள்வது இயல்பு. இதைச் சிந்திக்காத கலிக்கம்ப நாயனார் தன் மனைவியைத் தண்டிப்பது என்பது பெண்ணடிமை நிலை மேலோங்கியுள்ளதை உணர்த்துகிறது. எனவே இவற்றிலிருந்து பெண்கள் தானப் பொருளாகக் கருதப்பட்டதையும் சிறுதவறுக்காகப் பெரிய தண்டனையும் கொடுத்துள்ளனர் என்பதையும் உணரமுடிகிறது. இச்செயல்கள் பெண்களைத் தாழ்வுநிலையில் ஆண்கள் வைத்துள்ளனர் என்பது தெளிவாக்குவதில் ஐயமேதுமில்லை.

## கருவிப்பொருள்

கணவனின் உரிமைப் பொருளாக மனைவி இருக்கிறாள் என்பதை இயற்பகை நாயனாரின் வரலாறும் கலிக்கம்ப நாயனாரின் வரலாறும் சான்றாக இருக்கின்றன. இக்கருத்தினைக் கண்டித்து திருமூலர்,

“திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனியை

அருந்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்

பொருத்தமிலாத புளிமாங்கொம் பேறிக்

கருத்தறி யாதவர் காலற்ற வாறே”

என்ற பாடலடிகளின் மூலம் கொடியவர்கள் தம் மனைவியை வருத்தும்படி விட்டுவிட்டுப் பிறர் மனைவியை விரும்புவது புளிய மரக்கொம்பில் ஏறிப் பயன்படாது கீழே வீழ்ந்து கால் ஒடிகின்றன என்று கூறியுள்ளார் (Ramanathan Pillai, 2009). எனவே வாழ்க்கை துணையாக வாழும் கற்புடைய பெண்கள் வீட்டையும் குடும்பத்தையும் பாதுகாக்கும் கருவிப்பொருளாக ஆண்கள் பயன்படுத்துகின்றனர் என்பது தெளிவாகிறது.

## நாயன்மார்களில் பெண்கள்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூன்று பெண்கள் மட்டுமே குறிப்பிட்டுள்ளனர்.1. காரைக்கால் அம்மையார், 2. மங்கையர்க்கரசியார், 3. இசைஞானியார். இம்மூவரில் காரைக்கால் அம்மையார் மட்டும் நூல்களை இயற்றியுள்ளார்.

## காரைக்கால் அம்மையார்

பேயார்க்கும் அடியேன் என சுந்தரர் காரைக்கால் அம்மையாரைப் போற்றி பாடியுள்ளார். இறைவன் வீற்றிருக்கும் கயிலை மலையினைத் தன் காலால் மிதிக்கக் கூடாது என எண்ணிய காரைக்கால் அம்மையார், அம்மலையில் தலைகீழாக நடந்து சென்றார். இதைக் கண்ட இறைவன் பெண்ணின் மன வலிமையைக் கண்டு அம்மையே என்னை பெற்ற தாயே என்றும் செழுந்தேனே என்றும் போற்றியதை

“நம்பன் திருமலை நான்மிதி

யேன் என்று தாள்இரண்டும்

உம்பர் மிசைத்தலை யால் நடந்து

ஏற உமைநகலும்

செம்பொன் உருவன்என் அம்மை

எனப் பெற்ற வன் செழுந்தேன்

கொம்பின் உருகாரை காலினின்

மேய குலதானமே”

என்ற பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது (Natarajan, 2014).

## பக்திநெறி

காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள் இரண்டே பாடியுள்ளார். திருஇரட்டை மணிமாலை, அற்புத திருவந்தாதியும், பாடியுள்ளார். சிவனைப் போற்றி சுடுகாட்டில் ஆடுபவளாகவும் இயற்றியுள்ளார். திருஇரட்டை மணிமாலை என்பது கட்டளைக் கலித்துறை முன்னும் வெண்பா பின்னுமாக அந்தாதித் தொடையில் இருபது செய்யுள்கள் பாடுவதாகும். தமிழ் இலக்கியங்களில் திருஇரட்டை மணிமாலை என்ற செய்யுள் அமைப்பில் முதன்முதலாகப் பாடிய பெருமை காரைக்கால் அம்மையே ஆவார்.

இவ்வம்மையார் இறைவனை,

“துத்தங்கைக் கிள்ளை விளரிதாரம்

உழைகுளி ஓசைபண் கெழும்பாடிக்

கச்சரி கொக்கரைதக்கையோடு

தகுணிதந் துந்துபி தாளம் வீணை

மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்

தமருகம் குடமுழா மொந்தை வாசித்து

அத்தனை விரவினோடு ஆடும் எங்கள்

அப்பன் இடம்திரு ஆலங்காடே”

என்ற வரிகளின் மூலம் துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, குளி, ஓசை என்ற ஏழு பண்களையும் இசைத்து கச்சரி, கொக்கரை, தக்கை, தகுணி, துந்துபி, தாளம், வீணை, மத்தளம், கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை முதலிய வாத்திய வகைகளை இயக்கி வணங்க வேண்டும் என்கிறார் (Natarajan, 2014). இதிலிருந்து இறைவனை ஆடல் பாடலோடு வணங்க வேண்டும் என்பதை அறியமுடிகிறது.

## மங்கையர்க்கரசியார்

சோழ அரசனின் மகளாகப் பிறந்து பாண்டிய அரசனின் மனைவியாக வாழ்ந்தவள் மங்கையர்க்கரசியார். இவள் சிவனை வழிபட்டு தன் கணவனையும் சைவ வழிபாட்டையும் மேற்கொள்ள வேண்டும் என்ற அரிய எண்ணத்தில் தன் நாட்டு அமைச்சர் குலச்சிறையாரின் துணையால் திருஞானசம்பந்தரால் மாற்றினாள்.

“மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை

ஆலவா யாவதும் இதுவே”

என்ற பாடலடிகளின் மூலம் திருஞானசம்பந்தரே ஒரு பதிகம் முழுக்க இப்பெண் அரசியைப் புகழ்ந்து பாடியுள்ளார் (Natarajan, 2014).

“வரிவளைக் கைம்மட டானி”

போர் செய்தற்கரிய வேல்படை கொண்ட பாண்டியர்க்கு தீச்சுரம் ஏற்பட்டது. அதனைப் போக்க சமணர்கள் முற்பட்டனர் (Natarajan, 2014). சுரம் தணியவில்லை. வாசமலர்க் குழல் பாண்டிமாதேவி நாடு விளங்க மன்னனின் நலிவு நீங்க, திருஞானசம்பந்தருக்கு அறிவித்திட அவரும் மதுரை போந்தனர். சமணர்களுடன் வாதிட்டு வெற்றியடைந்து இதனால் தீங்கு விளைவிக்க அதனையும் வென்று கூன் பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாக மாற்றி தென்னாட்டைச் சைவமாக மாற்றினார் என்ற கருத்தினை,

“பூசல் அயில்தென்ன னார்க்கு அன

லாகப் பொறாமையினால்

வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியாம்

மானிகண்டீர்

தேசம் விளங்கத் தமிழா கரர்க்கு அறி

வித்துஅவரால்

நாசம் விளைத்தாள் அருகத் தருக்குத்தென்னாட்டகத்தே”

என்ற வரிகளின் மூலம் உணரமுடிகிறது (Natarajan, 2014).

ஒரு பெண் சைவ சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்து தன் கணவனையும் தன் நாட்டு மக்களையும் சைவ சமயத்தையும் பின்பற்ற செய்தாள் என்பது அவளின் பக்தி நெறியைக் காட்டுகிறது.

## இசைஞானியார்

சுந்தரர் சிவனை வழிபட்டவர். தனது சகத்தோழனாக இறைவனிடம் பல செயல்களை கேட்டுச் செய்தவர். இவர் எப்பொழுதும் எக்காரியம் செய்தாலும் சிவனை வணங்கி தன் மனதில் நினைத்து தியானிப்பது தம் தாயாகிய இசைஞானியார் என்பதை

“பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள் ‘

ளைப்பொள்ளல் நீள்பனைக்கைக்

கயந்தான் உகைத்தற் காளையை

என்றும் கபாலிங் கைக்கொண்டு

அயற்தான் புகும்அரண் ஆரூர்ப்

புனித அரன்திருத்தாள்

நயந்தாள் தனதுள்ளதது என்னும்

உரைப்பது ஞானியையே”

என்ற பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது (Natarajan, 2014). இம்மூன்று பெண்களும் பக்திநெறியில் சிறந்து விளங்கியதால் நாயன்மார்களில் தனி அடியவர்களாகப் போற்றி வணங்கியுள்ளனர். இதுவே பெண்களுக்குப் பெருமைபடுத்தும் விதமாகப் போற்றப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

## முடிவுரை

பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்பட்டதைப் பக்தி இலக்கியம் எடுத்துரைக்கிறது. சிவனே தன் உடம்பில் பாதி பெண்ணுக்குக் கொடுத்து சமஉரிமை அளிக்கப்பட்டதைத் திருமுறைகளில் நாயன்மார்கள் எடுத்துரைத்துள்ளனர். சமய உரிமையும் பெண்ணுக்கு வழங்கப்பட்டதையும் அவர்கள்

சுதந்திரமாகச் செயல்பட்டனர் என்பதைக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் இசைக்கலையில் வல்லவர்களாகவும் ஆடல்கலையில் சிறந்தவர்களாகவும் இருந்ததை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தாய்மையைப் போற்றும் திருமூலர் பெண்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் கூறியுள்ளார். பெண்களுக்குச் சமஉரிமை வழங்கப்பட்டிருப்பினும் சிறுதவறுக்காக அதிகமாகத் தண்டிக்கப்பட்டதைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் கணவனை எதிர்த்து பேசாமல் இருப்பதும், இழிவாக விலைமகள் என்றும் பெண்களைக் கருவிப்பொருளாகக் கருதப்பட்ட நிலையைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. அரசப் பெண்ணாக இருந்தாலும் மற்றவர் சிவனடியாராக இருந்தால் தண்டிக்கும் உரிமை பெற்றவர் என்ற நோக்கில் பெண்களைத் தண்டிக்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. நாயன்மார்களில் மூன்று பெண்களில் காரைக்கால் அம்மையார் மட்டுமே நூல்களை இயற்றியுள்ளதால் அவரின் சமுதாயத்தைப் பற்றிய கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன. மங்கையர்க்கரசியின் பக்திநெறியை ஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

## References


Natarajan, P.R., (2014) Thirugnanasambandar Thevaram, Uma Pathippagam, Chennai, India.

Ramanathan Pillai, P., (2009) Tirumantiram, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License